மதிய உணவாக
கோழி பிரியாணி
குசுமிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள

செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ மிக்ஸ் ஜூஸ்க்கும்

செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 23 சனிக்கிழமை (07 - 01 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 42

# இன்று நள்ளிரவு முதல் போர் இடை நிறுத்தம்

# பிரபா - சந்திரிகா ஒப்பமிட்டுப் பிரகடனம்

## ஆறு கண்காணிப்புக் குழுக்கள் நிறுவப்படும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்

யாழ்ப்பாணம், ஜனவரி 7

அரசாங்கப் படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளும் இன்று நள்ளிரவு தொடக்கம் போர் இடை நிறுத்தும் (Cessation of Hostilities) செய்வர்.

இதற்கு வகை செய்யும் போர் இடை நிறுத்தப் பிரகடனம் நேற்று வெளியிடப்பட்டது. அந்தப் பிரகடனத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் கையொப்பமிட்டுள்ளனர்.

போர் இடை நிறுத்தம் செய்யப்படும் என்பதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தாம் நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையின் போதும் அறிவித்தார்.

தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் கைச்சாத்திட்ட போர் இடைநிறுத்தப் பிரகடனம் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் நேற்றிரவு அந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிக்க வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஆறு கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட உள்ளன.

(போர் இடைநிறுத்தம் சம்பந்தமான விவரங்களை அருகே உள்ள பிரகடனத்தில் வாசியுங்கள்)

(அ-ஐ-3)

## போர் இடை நிறுத்தம் கண்காணிக்க நோர்வே, டென்மார்க் குழுக்கள்

### நாளை கொழும்பு வந்து சேரும்

கொழும்பு, ஜன. 7

இலங்கை அரசுக்கும்—விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழுக்களுக்கு தலைமை வகிக்க அவதானிகளை அனுப்பி வைக்க நோர்வே நேற்று முன்வந்துள்ளது.

நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் ஜோன் ரேகொடால் இதுபற்றி குறிப்பிட்டபோது, சமாதான நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு ஒன்று அல்லது இரண்டு அவதானிகளையும், மற்றும் நிபுணர்களையும் அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு தாம் இணங்கியிருப்பதாகக் கூறினார்.

இதுபோன்று நெதர்லாந்து அரசுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையையும் அந்த நாட்டு அரசு ஏற்றுள்ளது.

இந்த அவதானிகள் ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

## இறுதிக்கட்ட பேச்சுக்கு புலிகளை அரசு கொழும்புக்கு அழைக்கும்!

### அமைச்சர் கதிர்காமர் தகவல்

கொழும்பு, ஜன. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இறுதி ஒப்பந்தம் செய்யப்படும் போது சகல அரசியல் கட்சிகளினதும் உதவி பெறப்படும். கொழும்பில் இறுதிக் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைக்கப்படவுள்ளனர்.

இவ்வவாறு நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியப் பிரதமர் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்த சமாதான முன்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## முழுமையான போர் நிறுத்தம் ஒன்றை நோக்காக கொண்டதே போர் இடைநிறுத்தம்

### அன்டன் பாலசிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

போர் இடைநிறுத்தம், ஓர் முழுமையான யுத்த நிறுத்தத்தை நோக்காகக் கொண்டு செய்யப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் — அதாவது மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் — யுத்த நிறுத்த கண்காணிப்புக்காக இங்கு வருவது முக்கியமான விஷயமாகும்.

அதாவது இந்தப் பிரச்சினை ஓரளவில் சர்வதேசமயப்படுத்தப்படுகிறது.

அத்தோடு போர் நிறுத்தம் ஓர் நிலையானதாக — நிரந்தரமானதாக மாற்றம் கொள்வதற்கும் உதவும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கடந்த கால போர் நிறுத்தங்கள் மீறப்பட்டதால தான் பேச்சுக்கள் குழம்பின.

திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது வவுனியாவில் இராணுவம் 200 பொதுமக்களை கொன்றதையடுத்து

( 5ஆம் பக்கம் பார்க்க)

## போர் இடைநிறுத்தம் மீறப்படினும் சமாதான முயற்சியை நிறுத்தோம்!

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 7

தற்போது மேற்கொள்ளப்படும் போர் இடைநிறுத்தம் மீறப்பட்டாலும் கூட அரசின் சமாதான முயற்சிகள் நிறுத்தப்படமாட்டா.

இவ்வாறு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்தார்.

போர் நிறுத்தத்தின் மார்க்கத்திலும், இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதிலும் இது ஒரு மாபெரும் முதலாவது நடவடிக்கை என்றும் அவர் வர்ணித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி [illegible]

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 7

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் [illegible] ளர்.

(ஐ)

## போர் இடை நிறுத்தப் பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜன. 7

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையிலான போர் இடை நிறுத்த (மோதல் தவிர்ப்பு) உடன்பாடு குறித்து நேற்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அறிவிக்கப்பட்டது.



அரசாங்க சார்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் விடுதலைப் புலிகள் சார்பில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனும் ஒப்பமிட்ட போர் இடைநிறுத்தப் பிரகடனம் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டது.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள இந்தப் பிரகடனம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததும், சிறப்புடைய ஆவணமுமாகும்.



அந்தப் பிரகடனத்தை முழுமையாக இங்கே தருகிறோம்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு போர் நடவடிக்கைகளை இடை நிறுத்தம் செய்வதென அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட உடன்பாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் வருமாறு:

1. இந்தக் காலகட்டத்தில் இருதரப்பினரும் எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது. அப்படித் தாக்குதல் நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ளப்படுமாயின் அது இந்த ஒப்பந்த மீறல் நடவடிக்கையாகக் கருதப்படும்.

2. பாதுகாப்புப் படையினரும், விடுதலைப் புலிகளும் தமக்கு மத்தியில் 600 மீற்றர் இடைவெளியில் தற்போதைய நிலைகளில் தரித்திருப்பர். எனினும் இருதரப்பினரும் தமது காவலரண் நிலைகளிலிருந்து 100 மீற்றர் தூரம் வரை நடமாட உரிமையுண்டு. அதாவது 400 மீற்றர் இடைவெளியை வைத்துக்கொண்டு இருதரப்பினரும் இந்தக் குறிப்பிட்ட தூரம்வரை நடமாடலாம். இந்தத் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தை அத்துமீறுதல் போர் நடவடிக்கையாக கருதப்படும்.

3. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தமது சட்டபூர்வமான பணிகளை கடற்படையும் ஆகாயப்படையும் தொடர்ந்து கடைப்பிடிக்கும். இந்தப் பணியின்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படமாட்டாது. குறிப்பிட்ட பிரதேசங்களில், சட்டபூர்வமான மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு விளைவிக்கப் படமாட்டாது.

4. நாசகாரச் செயல்கள், குண்டு வெடிப்புகள், கடத்தல்கள், கொலைகள், பயமுறுத்தல்கள் போன்ற நடவடிக்கைகள் எந்தவொரு அரசியற் கட்சிகள், குழுக்கள், தனிநபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படுமாயின் அது ஒரு தாக்குதல் நடவடிக்கையாகக் கருதப்படும்.

5 அ. இந்த ஒப்பந்தம் மீறப்படாமல் கண்காணிப்புச் செய்வதற்கும், ஒப்பந்த விதிகள் மீறப்படுவதை விசாரணை செய்வதற்கும், கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழுக்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் தேவைப்படும் இடங்களில் நியமிக்கப்படலாம்.

ஆ. இருதரப்பினரில் யாராவது முறையீடு செய்தால் அதனை விசாரித்து, அந்தப் பிணக்குகளைத் தீர்க்கும் பொறுப்பு இந்தக் கண்காணிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

இ. கனடா, நோர்வே, நெதர்லாந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிலிருந்து இந்தக் குழுக்களின் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப் படுவதுடன், இருதரப்பினரது இணக்கத்துடன், உள்ளூரில் ஓய்வுபெற்ற நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரஜைகளும் இக் குழுக்களில் அங்கத்துவம் வகிக்கலாம்.

ஈ. இந்தக் குழு ஒவ்வொன்றும் ஐந்து பேர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கும்.

அரசாங்கத்திலிருந்து இருவர்.
விடுதலைப் புலிகளிடமிருந்து இருவர்.
வெளிநாட்டிலிருந்து ஒருவர். [இவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்]

உ. இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதை இருதரப்பினரும் அனுமதிக்க வேண்டும்.

ஊ. இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது பணிகளை நடுநிலையாகவும், விரைவாகவும் மேற்கொள்ள இருதரப்பினரும் வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

6. உள்ளூரில் எழும் பிரச்சினைகளை உடன் தீர்த்துவைக்கும் பொருட்டு பாதுகாப்பு படையினருக்கும் புலிகளின் மாவட்ட தளபதிகளுக்கும் மத்தியில் தகவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

7. மோதல் தவிர்ப்பை நிறுத்தப்போவதாக இருதரப்பினரில் ஒருவர் அறிவிக்கும் வரை போர் இடைநிறுத்தம் தொடரும். இந்த அறிவிப்பு 72 மணி நேரத்திற்கு முன்னராக தரப்படவேண்டும்.

கையெழுத்திட்ட திகதி:- 05 - 01 - 1995

வே. பிரபாகரன்,
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா.
ஜனாதிபதி,
சிறீ லங்கா

## பிராந்திய தளபதிகளுக்கு பிரபா பணிப்பு

போர் இடைநிறுத்த வழிமுறைகள் குறித்தும் — கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும்— தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று பிராந்திய தளபதிகளுக்கு விசேட பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

இன்று நள்ளிரவு முதல் அமுல் செய்யப் படவிருக்கும்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களுக்குச் சமீபமாக செல்லாமல் மீன் பிடிக்கலாம்

யாழ்ப்பாணம் ஜன. 7

இன்று நள்ளிரவு முதல் போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததும் இராணுவ முகாம்கள், கடற்படைத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளை அண்டிய பிரதேசங்களை தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளலாம்.

நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

பிரிவு: III

ஆண்டு 9, 10, 11

புதிய வகுப்புக்கள்

03-01-1995இல் ஆரம்பமாகிவிட்டன

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | இந்திரன் |
| தமிழ் | — | பண்டிதர் N. S. மணியம் |
| ஆங்கிலம் | — | மகாலிங்கம் |
| சமூகக்கல்வி | — | வேலா |
| வர்த்தகம் | — | நாதன் |

★ அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.
★ அலகு ரீதியான பரீட்சைகள் நடைபெறும்.

(சி-60)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 — 06 — 1928

உதிர்வு: 07 — 01 — 1994

## அமரர் சூசைப்பிள்ளை இராயப்பு

(ஓய்வு பெற்ற C. W. E காசாளர்)

ஆண்டொன்று ஆனாலும்
ஆறிடுமோ எம் இதயம்
ஆயிரம் ஆண்டு தான் போனாலும்
அகன்றிடுமோ உம் நினைவு.

உம் இதயக்கனவுகள் நனவாகு முன்
மின்னலைப் போல் மறைந்த மாயமென்ன
உற்ற துணையின்றித் தவியாய்த் தவிக்கின்றோமே
இறைவனே எம் துணையாக வேண்டிடுவீர்.
உம் ஆன்மா சாந்தி பெறுக!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்.

சில்லாலை,
தற்போது கனகசபை வீதி,
மானிப்பாய்.

(34548)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## பொன்னையா கனகசுந்தரம்

(பொத்தப்பா)

மலர்வு: 31 — 10 — 1960

உதிர்வு: 23 — 11 — 1994

தொண்டாற்றுதலையே முழு மூச்சாகக் கொண்டு தன்னலம் கருதா சேவையாளன் திரு. பொ. கனகசுந்தரம் அவர்களின் 45ஆம் நாள் சபிண்டீகரண நிகழ்வு, அன்னாரது சேவையை நினைவு கூரும் வண்ணம் நாளை (08-01-1995) ஞாயிறு எமது இல்லத்தில் இடம்பெறும் வைபவத்திலும், அதனைத் தொடர்ந்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறும் அன்னதானத்திலும் பங்கு பற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொன்னையா (தாயார்),
திரு. பொ. கனகலிங்கம் (சகோதரன்).

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

முருகன் களஞ்சியம்,
சிறுப்பிட்டி.

[34556]

உ

# நெஞ்சுகள் யாவிலும் நின்றிடும் தெய்வம்!

வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்ந்திட என்றே
நல்லருள் நெஞ்சினளாய் — துர்க்கை
நாயகி பேரருட் காலிணை பற்றி,

நின்றவள் வென்றவளாம் — ஈழ
நெஞ்சுகள் யாவிலும் நின்றிடும் தெய்வம்!
துன்றருள் தங்கம்மா நம் — தேசத்
துன்பம் துடைத்தொளிர் சைவம்
வளர்ப்பாள்

எழுபதாம் அகவையினை — எய்தும்
இத்தினம் சைவர்கள் பொற்றினம்
அன்றோ?
தொழுகுவம் தோத்தரிப்போம் — இந்தத்
துய்யவள் நீடுழி வாழிய என்றே!

திருமதி திலகவதி குமரவேல்

சுன்னாகம். (34578)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

O/L EVENING CLASS

பிரிவு - II

ஆரம்பம்: 07-01-1995

மாலை 2மணி

★ O/L Day / Sat. Sun. வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

[சி-268]

# இறுதி அறிவித்தல்

எமது மன்றத்தினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட, அதிர்ஷ்டத்துக்கான பணத்தை 10 — 1 — 1995 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத் தருகின்றோம். இத் திகதிக்கு பின்னர் எந்தவிதமான கொடுப்பனவும் மேற்கொள்ள முடியாது என்பதை கவலையுடன் அறியத்தருகின்றோம்.

நன்றி.

செயலாளர்,
வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றம்.

(சி-263)

# லிகிதர் தேவை

எமது மன்றத்தின் வேலைகளைச் செய்வதற்கு லிகிதர் தேவை. இதற்கு முன்னர் விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்காதவர்களும், குடும்ப அட்டை, கல்வித் தகைமையுடன், தொழில் தகைமையிருப்பின் அதற்கான சான்றிதழ் உடன் நேரில் வரவும்.

10 - 1 - 1995 காலை 9-30 மணியிலிருந்து 2 மணி வரையும் நேர்காணல் இடம்பெறும். (ஆண்கள் விரும்பத்தக்கது)

செயலாளர்,
வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றம்,
இல. 8, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(அசோகா ஹோட்டலுக்கு அருகில்)

[சி-264]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



வரவு: 12 — 02 — 1928

நிறைவு: 08 — 12 — 1994

## அமரர் வ. கந்தையா

(மீசாலை)

இறைவன் திருவருளால் எங்கள் இல்லற அகல் விளக்காய்த் தோன்றி, உற்றார், உறவினர், அயலவர் அனைவரினதும் பேரன்பைப்பெற்று இல்லறப்பணி, இறைபணி ஆகியவற்றையும் செவ்வனேசெய்து, இறைபதம் எய்திய உயர்திரு வ. கந்தையா அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்தி அஞ்சலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு. (8185)

## ஆலயங்களில்

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். உற்சவ தினங்களில் மாலை 6 - 30 மணிக்கு திரு. ஆறு. திருமுருகன் சமய சொற்பொழிவு ஆற்றுவார்.

(ஒ-4)

## இன்று

சங்கத்தானை யூப்பிட்டர் கல்வி நிலையத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் இன்று சனிபிற்பகல் 1மணிக்கு மேற்படி கல்வி நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உயிரியல் இரசாயனத்துறைத் தலைவர் கலாநிதி வசந்தி அரசரத்தினம் கலந்து கொள்வார்.

(ஒ-31-117)

★ ★ ★

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் இன்று சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில்மன்றத் தலைவர் இ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

(இ-117)

## கலந்துரையாடல்

தென்மராட்சி மினிபஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனி இரவு 7மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-31)

## புலிகளின் குரல் வானொலியில்

07 — 01 — 1995

சனி இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் "உவர்த் தன்மையை நீக்குவோம்" குறுநாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — நடனக்கலைஞர் திருமதி சாந்தினி சிவநேசனுடனான செவ்வி
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

08 — 01 — 1995

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

சனி மாலை ஒலிபரப்பு

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி-வினாபோட்டி: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவுகள்
★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.



(சி-161)

உ

சிவத்தமிழ்ச் செல்வி

# தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா

அவர்களின்

## 70ஆவது பிறந்தநாளில்

பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



கிருபா போட்டோ

அன்

வீடியோ சென்ரர்

காங்கேசன் சாலை, மல்லாகம்.

(7856)

# பூபால கிருஷ்ண ஆச்சிரமம்

சுன்னாகம்

ஸ்தாபகர் அருள்மிகு சுவாமி பிரேமானந்தா மகரிஷி

## "செம்மனச் செல்வி"

மதிப்பிற்குரிய அம்மா அவர்களைப்பற்றியும் அவர் சேவைகளைப்பற்றியும் நிறைய அறிந்து இருந்தும் சுவாமி பிரேமானந்தா ஆசி பெற்ற அவருடைய அன்பிற்கு உரியவர் என்ற ரீதியில் அண்மைக்காலத்தில் தான் அம்மாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய தயாளகுணம், விருந்தோம்பல், அன்பான, ஆதரவான பேச்சு என்னை மிகவும் கவர்ந்தது.

சுவாமிகளின் அருளுரையின் பிரகாரம் தியானம், பஜனை, பூசையினால் மட்டும் இறைவனை அடைய முடியாது. அன்பான சேவையைச் செய். கஷ்டப்பட்டவர்களுக்கு உனது சேவையைச் செய். அதுவே இறைவன் உறையும் இடம். அந்த வழியைக் கடைப்பிடித்து எல்லோர் மனதிலும் இடம்பிடித்தவர் அம்மா.

ஆத்தாள் துணையோடு அன்புவழி நின்று பல்லாண்டு காலம் அவருடைய சேவை நமக்குக் கிடைக்க எல்லாம் வல்ல சுவாமி பிரேமானந்தா அவர்களது ஆசிகள் துணை இருக்க நாமும் சக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி

நடராசா பாக்கியலட்சுமி
ஒருங்கிணைப்பாளர்

(சி/5764)

# ★ வாழ்த்துகின்றோம் ★

எழுபதாம் அகவையை அடைந்துள்ள
சிவத்தமிழ் செல்வி
★ தங்கம்மா அப்பாக்குட்டி ★
அவர்களையும்
அறுபத்துமூன்றாம் அகவையை
அடைந்துள்ள
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்
சமூகஜோதி
★ சு. ஸ்ரீபாஸ்கரன் ★
அவர்களையும்
மக்களுக்கு ஆற்றும் தொண்டில் உயர்ந்து நிற்கவும்
யா/மல்லாகம் மகா வித்தியாலய
வளர்ச்சிக்கு அருந்துணையாக அமையவும் எல்லாம்
வல்ல பழம் பிள்ளையாரின் அருள் பெற
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

(7854)

# ஆண்டு 12 அனுமதி

## யா/இராமநாதன் கல்லூரி

கலை, வர்த்தக, விஞ்ஞான (உயிரியல், கணிதம்) பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் 11 - 1 - 95 புதன் கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு:- விவசாய விஞ்ஞானம், நாடகமும் அரங்கியலும் உயர்தர வகுப்பில் கற்பிக்கப்படும்.

—அதிபர்

(சி/5762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபது நூறாகட்டும்!
# எங்களின் வாழ்வோங்கட்டும்!!



## சமரிடை மையங் கொண்ட சரித்திரப் புயலே... வாழி!

விழுதெறி விருட்சம் ஒன்று
விதியதன் நிழலாய் நின்று
"எழுபது வயதாம்"! தாயே...
இளமை ... கண் பட்டுப் போமே ...!
ஒளிருநின் புனிதத் தாளில்
உணர்ச்சியின் பிழிவாய்ப் பாக்கள்
பொழிந்து ... பல் லாண்டு பாடிப்
புளகினோம்; புலர்ந்தோம் வாழி!

எல்லையிற் பனையாய் ... தோட்டா
இடியிடை அரணாய் ... நித்தஞ்
"ஷெல்" விழுஞ் செருவூர்க் குள்ளே
"செதுக்கிய" சிற்பத் தோட்டம்
பல்கலை படைக்க ..., வாழ்வர்ப்
பணிக்கிறாய் "அம்மா"! ... வாயாற்
கொல்லையே தாண்டார் முன் ... நீ
கோவிலுங் காத்தாய் வாழி!

மன்னவர் செவிக்கு மட்டும்
மலர்கின்ற கவிதை ... இன்று
சந்நிதி தாண்டி ... மக்கள்
மகுடமாய்ச், சமைந்தாற் போலே ...
உண்மை, நேர்ச் சைவப் பொன்னை
உருக்கி நீ ... தாலி பூண்டெம்
"சொன்னயம்", சமயங் காக்கும் ...
சூத்திரம் வளர்த்தாய் வாழி!

சூரியன் காணா ... நாற்று
சுருண்டு, வெண் நிறமாய் வாடும்
வேரிலே கருகும்; — மீறா ...
விதியை நின் விழியால் மாற்றி ...
"ஊரிலார்" உயிரை உந்தன்
உதரத்துட் கர்ப்பம் ஆக்கி
நூறுஆண் டாகக் "காவ" ...
நுழைந்த ... நீ ... "கன்னித்" தெய்வம்

நிமிர்நடை, நேராய்ப் பார்வை
நிலத்தில் அஞ் சாமை, ஞானந்
திமிர்ந்த "தங் காத்தா" ...! தேர்ந்தாய்
திறம்பிடாய்! "புரட்சிச் சான்றாய்"
சமரிடை மையங் கொண்ட
சரித்திரப் புயலே ...! "பாலில்"
அமிர்தம் நீ பார்த்தோம் மங்கை
அறத்தில் நீ ... 'புதுப்பெண்' ஏற்றோம்

ஆயிரங் குழந்தை "பெற்ற"
அரசியே! அயலாரெல்லாம்
தாய் உனைச் "செல்வி" என்றாற்
தவறெலோ ...? சேவை வாழ்வைத்
தூய்துணை ஆக்கிப் ... பெய்யுந்
தூறலே! "கம்பன் சுற்றச்"
சேய் விழி காக்கும் ... "தேவச்
செவிலியே" ... தொழுதோம் உய்தோம்!

— த. ஜெயசீலன்

### இணைந்து வாழ்த்துவோர்

- ✶ திருகோணமலைக் கம்பன் கழகத்தினர்
- ★ காரைநகர்க் கம்பன் கழகத்தினர்
- ✶ ஊரெழுக் கம்பன் கழகத்தினர்
- ✶ வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்
- ✶ கொழும்புக் கம்பன் கழகத்தினர்

## அவனிக்கு இறங்கி வந்த ஆகாய கங்கை

பெண்மை அறத்தின்
பிறந்ததினம் இன்று
உண்மை.

ஆகாய கங்கை – இந்த
அவனிக்கு இறங்கி வந்து
அருவியெனப் பாய்கிறது
அகவை எழுபதுவாம்.

தேவாதி தேவர்
தேடிவைத்த அமுதின்
துளியொன்று வீழ – ஓர்
தோகை விரிந்தது.

கற்பகதருக் கன்று – இங்கே
கால் பதித்து நாற்றாகி
கனியும் பிஞ்சும் – இன்று
கொத்துமலர் நடுவே
தெல்லியூர் – தேவலோகம்.

பாவச் சகதியிலே
பதிந்த கால்களினால்
பரிதவித்த
பூமித்தாய்– உன்
புண்ணிய அடிபட்டு
புனர்ஜென்மம் எய்தினாள்.

பெண்மை என்பதற்கு
பெருமை எனப்
பொருள் செய்த
பெரியவள்.

பேதமை என்பதை– தன்னை
பிரியாத
நிழலினின்றும் கூட
நீக்கியவள்
நீ.

பிழையான பதிப்புகளின்
பிரகடனம் நடுவே
பாரதியின்
புதுமைப் பெண்ணுக்கு
பூரணமாய்ப் பொருந்தும்
பதவுரை.

வாடிய பயிராய்ச் சைவம்
வதங்குதல் கண்டே–தானும்
வாடிய வள்ளல் ஆர்?... நீ
வான் முகில்
வாழும் சைவம்

கோயில் திருப்பணியில்–நீ
குரவர் வரிசையிலே...

அன்பின் பெருக்கத்தில்
ஆழ்வார்கள் பட்டியலில்

அறிவுச் சுடர் வீச்சில்
ஒளவைக்கு அடுத்தபடி

ஆதரவுக் கரம் நீட்டும்
அன்னை தெரேஸா.

கம்பன் சேவைக்கு
கற்றூண், கண்ணிமை நீ.

த. சிவசங்கர்.

### இணைந்து வாழ்த்துவோர்

- ✶ பூபாலசிங்கம் பொத்தகசாலை யாழ்ப்பாணம்.
- ✶ போஸ்கோ, யாழ்ப்பாணம்.
- ✶ சிவகணேசன் பட்டுச்சோலை. யாழ்ப்பாணம்.
- ✶ கண்ணன்லொட்ஜ்,பரமேஸ்வராச் சந்தி.
- ✶ லீலா பேக்கவுஸ் & லீலா ஸ்ரோஸ் சங்கானை, சண்டிலிப்பாய்.
- ✶ பெஸன் ஹவுஸ், யாழ்ப்பாணம்.
- ✶ ஸ்ரீகாந்தா பொத்தகசாலை, யாழ்ப்பாணம்.

எழுபது கண்ட எங்கள் இனிய நற்றாயே உன்னை
தொழுகிறோம், துதித்தோம், என்றும் தூய நற்றொண்டே வாழ்வாய்
எழுந்த எம் அன்னாய்! கம்பன் எழு புகழ் போல ஓங்கி
பழுதிலாப் பெருமை கொள்க பாரெலாம் போற்ற வெல்க.

"பல்லாண்டு கூறிப் பணிகிறோம்"
**அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர்**

(விளம்பர இலக்கம்: வி-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் கிறைண்டிங் மில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: குணா மில், அல்லையம்பதி, துன்னாலை தெற்கு, துன்னாலை. [7849]

அடைவைக்கக் கூடிய நல்லின கோழி முட்டைகள், வான் கோழி பண்டம் முட்டைகள், [illegible] முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள், குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34441)

நல்ல நிலையில் உள்ள றொபின் ஜெனரேட்டர் (1.5 K.W) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: யோகா கலையகம், சுன்னாகம். [7850]

African Love Birds ஆபிரிக்க லவ் பேர்ட்ஸ், வெள்ளை சடை முயல்குட்டிகள், 4 பக்க கண்ணாடி மீன் தொட்டி உடன் விற்பனைக்குண்டு. 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். மனோன், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். [8178]

### தவறிவிட்டது

மறவன்புலோ விலிருந்து இணுவிலுக்கு செல்லும் வழியில் இரண்டு பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல: 819, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [34544]

### விற்பனைக்கு

புத்தம் புதிய YOG 2000 யன்மார் ஜப்பான் (Yanmar) 2000W உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. தி. சம்பந்தர், இல. 15/1, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ் நகர். [34560]

Honda CD-70 மிகவும் நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [34554]

அடைவைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், வான்கோழி, பண்டம் முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [34559]

எல்லா வகையான Prima கோழித்தீன்கள், கால்நடை மருந்து வகைகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [34558]

### கலண்டர்கள்

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் சிலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம், பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (34367)

### விலை குறைந்துள்ளோ

மெய்கண்டான், ஒப்சேர்வர் டயறி, றிச்சாட் அன் கொம்பனி டயறிகள் விலை குறைத்துள்ளோம். உடன் பெற்றுக் கொள்ளவும். பொருளியல் நோக்கு ஏக விநியோகஸ்தர்கள்: மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீ காந்தா புத்தகசாலை யாழ்ப்பாணம். [சி-97]

### G. A. Q. — B. A.

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்-அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை.பாடலும்விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு, கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு; உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-87]

### புலமைப்பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் 8-1-95இல் வெளியிடப்படும். ஆண்டு 6, 7, 8, 9 மார்கழி மாதத்திற்கான மாதிரி வினாத்தாள்கள் உள்ளன. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (34555)

### மணமகள் தேவை

வயது 46, வெளிநாட்டில் வேலை வாய்ப்புள்ள, சிறிதளவு ஆஸ்மா பாதிப்புள்ள, ஆரோக்கியமான, தாரமிழந்த குகவம்சத்தவருக்கு நற்குணமுள்ள, அழகிய, படித்த, பொருத்தமான மணமகள் தேவை. தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகொள்ளவும். கனகரத்தினம், 17ஆம் கட்டையடி, மூளாய்ப்பிள்ளையார் கோயிலடி, மூளாய். [34545]

---

உ
ஸ்ரீ துர்க்காதேவி துணை

சிவத்தமிழ் செல்வி பண்டிதை
துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
J. P. அம்மா அவர்களின்
70 ஆவது

## பிறந்த நாள் வாழ்த்து



**சிவத்தமிழ் செல்வி அம்மா உள்ளம்**

செந்தமிழ் போற்றும் உள்ளம்
செழுங்கலை போற்றும் உள்ளம்
சந்ததம் துர்க்கா பாதம்
தம்மையே நினைக்கும் உள்ளம்
எந்தவோர் உயிரும் நன்மை
எய்திட விரும்பும் உள்ளம்
சிந்தையால் உயர்ந்த உள்ளம்
சிவத்தமிழ் செல்வி அம்மா உள்ளம்.

வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான
அந்தணப் பெருமக்களும்,
பணியாளர்களும்.

(7851)

---

## ★ வாழ்த்துகிறோம் ★

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் 70ஆவது பிறந்த தினத்தில்,
பெரியம்மா அவர்கள் பலரும் பயனுறப் பல்லாண்டு
வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்க பல்லாண்டு!
வளர்க நும் தொண்டு!!

விழிப்புல வலுவிழந்தோர்.
வாழ்வகம்.

சுவாமி ஞானப்பிரகாசர் வீதி,
உடுவில். (சி-5761)

---

## உடுவில் மகளிர் கல்லூரி
## பட்டப்படிப்புகள் பிரிவு

**B. A. ( Part I ), B.A. (Final)**
(யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

ஆரம்பம்: **09-01-95**
திங்கள் 3 மணி

(சி-118)

---

## தேவை

**மொழிபெயர்ப்பாளர்கள்**
ஆங்கிலப் புத்தகங்களை தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர்கள்**
ஆங்கிலத் திரைப்படங்களின் வசனங்களை ஆங்கிலத்திலேயே எழுதி தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.
மொழிபெயர்ப்பு வசனங்களை திரைப்பட வசன நடைக்கு மாற்றும் ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும்.

**VDO/ODO பதிவு செய்பவர்கள்**
VDO/ODO பதிவு செய்யும் தொழில்நுட்ப அறிவு உடையவராகவும் இலத்திரனியலில் ஆற்றல் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குரல்கொடுப்பவர்கள்**
தமிழாக்கம் செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு குரல் கொடுக்கக்கூடிய குரல் வளம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**தட்டச்சாளர்கள்**
(ஆங்கிலம்/ தமிழ்)
தெரிவுசெய்யும் மொழியில் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்
- முடிவு திகதி 11 - 01 - 1995

விளம்பர இல: 744,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(34511)

---

சிவமயம்
இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

## 'இந்து தர்மம்' - மலர் -4
(சிவத்தமிழ் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்பு மலர்)

## வெளியீட்டு விழா

இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம்
காலம்: 08-01-1995 ஞாயிறு காலை 9-30மணி

*தலைவர்:*
திரு. ஆ. மகாலிங்கம்
(பதில் தலைவர், இந்து சமயப் பேரவை)

*பிரதம விருந்தினர்:*
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை)

*கௌரவ விருந்தினர்:*
பேராசிரியர் க. குணரத்தினம்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

*மங்கள விளக்கேற்றல்:*
இணுவில் ஸ்ரீ திருவரங்கன் சுவாமிகள்
கலாநிதி க. கனகராசா
(மில்க்வைற் தொழிலதிபர்)

*ஆசியுரைகள்;*
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்)
சிவஸ்ரீ. ச. சோமஸ்கந்தக் குருக்கள்
(ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் பிரதம குரு)
சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்
(அதிபர், இணுவில் சாஸ்தா குருகுலம்)

*வாழ்த்துரைகள்:*
திரு. இரா. சுந்தரலிங்கம்
(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)
பண்டிதர் மு. கந்தையா

*வாழ்த்திசை:*
இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ த. வீரமணி ஐயர்

*வெளியீட்டுரை:*
கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

*நூல் அறிமுகவுரை:*
கலாநிதி சபா. ஜெயராசா
(தலைவர், யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைப் பிரிவு)

*முதற்பிரதி பெறுபவர்:*
திரு. பொ. நடராசா
(அதிபர், இணுவில் அண்ணா தொழிலகம்)

அனைத்து இந்துக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

சஞ்சிகை வெளியீட்டுதவியும், விழா ஏற்பாடும்:
**இணுவில் வாழ் சைவாபிமானிகள்**

*சஞ்சிகை கிடைக்குமிடங்கள்:*
- ★ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
- ★ தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
- ★ குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை.

ஆ. மகாலிங்கம்,
பதில் தலைவர்.

சி. சக்திகிரீவன்,
செயலாளர்.
05-01-1995

இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம். (சி-121)

---

## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்
### மார்கழி மாத
## ★ 4-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

வாசல் வரச் சங்கழகும் சக்கரமும் நாமமெழும்
மேகமெழ மேன்மைதரும் மேனி துலங்கும்
நல்ல காணி முற்றும் கனிவிழையும் கருந்துளசி மலர் விரியும்
மாயவனின் வீட்டருகே மாலை குவியும்
காலை மணி ஒலிகேட்கக் கடற்கரையின் ஊர் விழிக்கும்
கண்ணன் புகழ் பாடியாடப் பகல் போகும்
இது போரகலப் பகையகலப் பொழுதெல்லாம் எமைக் காக்கும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)

---

## "நலமுடன் வாழி நீடு"

தெல்லிநகர்த் துர்க்கை அருளால்
தேசமுய்யப் பணி செய்வோய்
பல்லவர் கால நற்பணிகள் பல
பாரினில் செய்துவப் போய்
அல்லலுற்று உளம் நொந்தோர்க்கு
அருள்மனை அமைத் துள்ளோய்
நல்லவர் போற்றும் தங்கம்மாவே
நலமுடன் வாழி நீடு!

(சி. சபாநாதன்)



பண்டிதை தங்கம்மா அவர்களின் 70 ஆவது அகவையை முன்னிட்ட கவிதை

வாழ்த்துவோர்:
இந்து வாலிபர் சங்கம்,
திருஞான சம்பந்த வித்தியாசாலை -
அபிவிருத்திச் சபை.

வட்டுக்கோட்டை. [சி-111]

---

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

## 70-வது பிறந்தநாள் வாழ்த்து

**07 - 01 - 1995**

கண்டது ஈசன், துர்க்கை கவினடிச் சேவை வாழ்வுத்
தொண்டது ஏதிலார்தம் உயர்நெறி என்றே செய்யும்
பெண்டிரிற் தெய்வ மன்ன பீடுடைத் தங்கம் மாதான்
கண்டனர் எழுப தாண்டு நிறைவிவர் நீடு வாழ்க!

[34543]

— வடமராட்சிக் கம்பன் கழகம்

---

## 31-ம் நாள் நினைவலைகள்



**செல்வன் பாலசந்திரன் றிதுசான்**

மலர்வு: **21 — 09 — 1990**
உதிர்வு: **07 — 12 — 1994**

எங்கள் எல்லோரது இதயத்திலும் நீங்கா நினைவாக நிலை நிற்கும் அன்புச் செல்வம் றிதுசானே! நீர் ஐந்து வயதில் ஐம்பது வயதான நிகழ்வுகளை நிகழ்த்திவிட்டு, இறைவன் பாதம் சென்றுவிட்டீரே! உமது ஆன்ம ஈடேற்றத்திற்காக மனம் உருகி நிற்கும்;

பாசமிகு குடும்பத்தினர்,
உறவினர்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (34534)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிகாவின் ஆரம்பம்

★ அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் இடைநிறுத்தம் (மோதல் தவிர்ப்பு) இன்று நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்குவரும்.

— அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு நடைமுறைக்கு வருவதோடு புதிய யுகம் ஒன்று ஆரம்பமாகும். அது நாட்டில் சமாதானத்தையும், ஒற்றுமையையும், சுபீட்சத்தையும் உருவாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கையாகவும் அமையும். மோதல் தவிர்ப்பு சமாதானப் பேச்சு சுமுகமான முறையில் இடம் பெறவும் உதவும்.

★ அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கான அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் (யோசனை) ஒன்றை அது விரைவில் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கும்.

— அரசாங்கம் சமர்ப்பிக்க இருக்கும் அதிகாரப் பரவல் சம்பந்தமான தீர்வுத்திட்டம் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட உள்ள பேச்சுவார்த்தைக்கு அடித்தளமாக அமையும்.

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. சகல இன, கலாசாரக் குழுக்களினதும் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் அந்தத் தீர்வு அமைய வேண்டும்.

— ஒற்றுமையுடன் கூடிய அமைதியைத் தருவதாக இனப்பிரச்சினைக்குரிய தீர்வு அமைவது அவசியம். காணப்படவுள்ள சமாதானத் தீர்வு சகல மக்களும் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு வகை செய்யும் விதத்திலும், மனித விழுமியங்களைப் பேணும் விதத்திலும் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா, நாடாளுமன்றக் கூட்டத்தொடரை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துப் பேசிய போது குறிப்பிட்ட முக்கியமான அம்சங்களில் மூன்று இவை.

தமிழ் மக்களோடு சம்பந்தப்பட்டவையும், அவர்களுக்கு அக்கறை உள்ள விடயங்களும் இவை மூன்றுமே ஆகும்.

மோதல் தவிர்ப்பை அமுலுக்குக் கொண்டு வருவது குறித்து அரசுத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் பக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இணக்கம் காணப்பட்டிருந்தது. அதற்கான திகதியை இழுத்தடிக்காமல் சந்திரிகா அறிவித்திருக்கிறார். அது நல்லது.

மோதல் தவிர்ப்பு நிரந்தர போர் நிறுத்தமாக மாறினால் மட்டுமே அது புதிய திருப்பம் ஒன்றை உண்டாக்கும் என்று கருதுகிறோம். போர் நிறுத்தப்பட்டால்தான் வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் நிம்மதியாக வாழ வழி பிறக்கும். அவர்கள் இயல்பான வாழ்க்கையை நடத்தும் சூழ்நிலை உருவானால்தான் அரசியல் தீர்வு குறித்தும் பேச முடியும்.

அரசியல் பேச்சுவார்த்தைக்கு அடித்தளமாக அரசாங்கம் தனது சொந்தத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது. இது விடயத்தில் அரசாங்கம் எங்கே நிற்கிறது என்பதனைத் தமிழர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று சந்திரிகா காணும் கனவு, வார்த்தைகளாகக் கேட்பதற்கு நன்றாகவும், நம்பிக்கை ஊட்டுவனவாகவும் இருப்பது உண்மையே.

ஆனால் தமது கனவை நனவாக்குவதற்கான அவரது செயற்பாடு எவ்வாறு அமையப் போகிறது என்பதனை இப்போது கற்பனை செய்வதோ அன்றி மதிப்பிடுவதோ இலகுவானதல்ல. ஆரம்பம் நன்றாகவே உள்ளது. முடிவும் அவ்வாறே அமைய வேண்டும்; அதுவே ஆகட்டும் என விழைகின்றோம்.

# கொட்டாஞ்சேனை பகுதி விடுதிகளில் நள்ளிரவில் பொலீஸார் சோதனை!

கொழும்பு, ஜன. 7

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் தமிழர்கள் தங்கியிருக்கும் சில விடுதிகளில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளையில் பொலீஸார் சோதனை நடத்தினர்.

சிவில் உடையில் வந்த பொலீஸார் அங்கு தங்கியிருந்த தமிழர்களை விசாரணைக்கு உட்படுத்தினர். பெண்களும் விசாரிக்கப்பட்டனர். அவர்களின் பயணப் பைகளும் சோதனையிடப்பட்டன.

''கொழும்புக்கு எதற்காக வந்தீர்கள்'' எனப் பொலீஸார் துருவித் துருவி தங்களிடம் கேட்டதாக விடுதியில் தங்கியிருந்தோர் கூறினர்.

சில இளைஞர்களை மறு நாள் காலை இரகசிய புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு பொலீஸார் கடிதம் கொடுத்துவிட்டுச் சென்றனர் என்றும் —

இதனால் தமது அவசியத் தேவைகளின் பொருட்டு வட பகுதியில் இருந்து கொழும்புக்கு வந்த தமிழர்கள் சிலர் தமது கருமங்களைத் தொடர முடியாமல் அவசரமாக மீண்டும் வடபகுதிக்குத் திரும்பி விட்டனர் என்றும் கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஒ)

# அறிஞர்களை திருப்பி வரவழைத்து அரசு மன்னிப்பு கோர வேண்டும்

## கோபாலசாமி அறிக்கை

தஞ்சாவூர், ஜன 7

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்ற முடியாமல் தடுத்து, இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அறிஞர்களையும், அவர் தம் குடும்பத்தவரையும் உடனடியாக திருப்பி அழைத்து அரசு மன்னிப்புக் கேட்கும்படி செய்ய வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி அறிக்கையொன்றின் மூலம் கேட்டுள்ளார்.

தமிழக அரசு காவல்துறையினரின் துணையோடு இவர்களை வெளியேற்றி அவமானப்படுத்தியுள்ளது. இது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டிய செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**கருணாநிதி கண்டனம்**

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் தஞ்சையில் நடத்தப்படும் அ.தி.மு.க. மாநாட்டில் தமிழுக்கும், தமிழறிஞர்களுக்கும் இழைக்கப்படும் இழிவு கொஞ்ச நஞ்சமல்ல. முதலமைச்சர் ஜெயலலிதாவையே தமிழ்த் தாயாகச் சித்திரித்து விட்ட பிறகு தமிழின் பெருமையும், சிறப்பும் தஞ்சை மாநாட்டில் வேதங்களுக்கு ஈடான ஜெயலலிதாவின் பாதங்களில் மிதிபடுவதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

தமிழ்மொழியின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காக குரல் கொடுத்த தமிழகத்துத் தமிழறிஞர் பெருமக்கள் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டு கிடக்கின்றனர். எல்லாத் தமிழ் மாநாடுகளுக்கும் அழைக்கப்பட்ட இலங்கை தமிழ் அறிஞர்கள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை.

அழைக்கப்பட்ட வெளிநாட்டு தமிழறிஞர்கள் சிலரும் அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழறிஞர்களும் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மேதைகளை அழைத்து, விளம்பரங்களில் அவர்களின் பெயர்களையும் வெளியிட்டு அவர்களது ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டுச் செலவில் அச்சியேற்றப்பட்டு நிகழ்ச்சிநிரலிலும் அவர்கள், பெயர்கள் இடம்பெற்ற பிறகு அவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த இடங்களில் இருந்து பொலீஸாரால் வெளியேற்றப்பட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். (ஒ)

# யாழ். ஆஸ்பத்திரியில் மீண்டும் ''பாஸ்'' நடைமுறை

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோருக்கான 'பாஸ்' அனுமதி முறை மீண்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களை பார்வையிட வருவோரின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக குறைவடைந்து இருந்ததை அடுத்து 'பாஸ்' அனுமதி முறையை நிறுத்திவிட செஞ்சிலுவைச் சங்கமும் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகமும் தீர்மானித்திருந்தன.

அதன்படி கடந்த முதலாம் திகதி முதல் 'பாஸ்' முறை யாழ். ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டிருந்தது.

'பாஸ்' அனுமதி முறை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஒருவார காலமாக நோயாளர்களைப் பார்வையிட வருவோரின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து ஆஸ்பத்திரிக்குள் சன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்தே மீண்டும் 'பாஸ்' முறையை அமுலுக்குக் கொண்டு வருவது என ஆஸ்பத்திரி நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் இந்த 'பாஸ்' அனுமதி முறையை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தொண்டர்களே கவனித்து வந்தனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகமே நேரடியாக 'பாஸ்' அனுமதி முறையைக் கவனிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததும் படையினரின் நிலைகளுக்கும் விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கும் இடைப்பட்ட 600 மீற்றர் தூரம் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியாக பிரகடனம் செய்யப்படும். அப் பகுதிக்குள் மக்கள் செல்லக் கூடாது.

[illegible] சியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு நேற்றையசெய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அந்தப் பகுதி யுத்த சூனியப்பிரதேசமாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

போர் இடைநிறுத்தத்தை கண்காணிக்கும் அரச பிரதிநிதிகளும் எமது தரப்புப் பிரதிநிதிகளும் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் நியமிக்கப்படுவர்கள் என்றும் அவர் கூறினார்.

# சகஜ நிலைமை உருவான பின்னர் தீர்வுத் திட்டம் குறித்து பேசலாம்

யாழ்ப்பாணம், ஜன. 7

''முழுமையான — நிரந்தரமான போர் நிறுத்தம் ஏற்பட்டு, அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வுகண்டு சகஜ நிலை உருவான பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை குறித்து பேச நாம் தயாராகவிருக்கிறோம்.

அதை ஓரம் கட்டிவிடும் நோக்கம் எமக்கு இல்லை.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ள பண்டா — செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வுத் திட்டம் குறித்துக் கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

இரண்டாம் கட்டப் பேச்சின்போது — பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கவேண்டும்; பூநகரியில் உள்ள படையினரை வாபஸ் பெற்று பூநகரிப் பாதையை போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும்; அகதிகளை மீளக் குடியேற்ற வேண்டும்; என்று அரச பிரதிநிதிகளிடம் கேட்டிருந்தோம்.

அடுத்த கட்டப் பேச்சுக்கு அவர்கள் வரும்போது இந்தக் கோரிக்கைகள் குறித்த அரசின் முடிவுகளுடன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான அடிப்படை பற்றி ஆராய முன்னர் அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால் சந்திரிகா கூறியபடி இனப்பிரச்சினை அடிப்படை பற்றிய தீர்வுத் திட்டத்தை பரிசீலிக்கமாட்டோம் என்று கூறவில்லை.

நிரந்தரமான — முழுமையான — போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும். மக்களின் அன்றாடப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் சகஜநிலை உருவான பின்னர் இனப்பிரச்சினை அடிப்படை பற்றி பேச நாம் தயாராகவிருக்கிறோம். அதை ஓரம்கட்டி விடும் நோக்கம் எமக்கு இல்லை—

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

# புலிகளின் ஆதரவாளர் எனக்கூறியே என்னை பொலீஸார் வெளியேற்றினர்

## பீற்றர் ஷேர்க் கூறுகிறார்

சென்னை, டிச.7

'தஞ்சாவூரில் நான் தங்கியிருந்த வீட்டுக்கு டிசம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவில் வந்த 6 பொலீஸ்காரர்கள் மறுநாள் காலை 6 மணியளவில் நான் தஞ்சாவூரைவிட்டு வெளியேறிவிட வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

நான் ஏன் அவ்வாறுசெய்ய வேண்டுமென அவர்களிடம் கேட்டபோது ''நீங்கள் விடுதலை புலிகளின் ஆதரவாளர் என்று முறைப்பாடுகள் வந்திருக்கின்றன'' என்று கூறினர்!

இவ்வாறு பேராசிரியர் பீற்றர் ஷேர்க் சென்னையில் ஹோட்டல் ஒன்றில் வைத்து ராய்ட்டர் நிருபரிடம் தொலைபேசியில் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காவே ஷேர்க்கை இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளது என்று புதுடில்லியில் உள்ள சுவீடிஷ் தூதரக பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்தத் தீர்மானம் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து தூதரகத்துக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் கூறினார்.

ஷேர்க்கும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளும் புதனன்று இந்தியாவை விட்டுப் புறப்பட்டதாகவும் சுவீடிஸ் தூதரகம் அறிவித்தது.

தான் புலிகளின் ஆதரவாளர் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு ஆபத்தானது என்று வர்ணித்த பேராசிரியர் ஷேர்க், நான் ஒரு குடும்பஸ்தன். எந்தவொரு ஆயுத மோதலுக்கும் ஆதரவோ பங்களிப்போ அளிக்கும் நோக்கம் எனக்கு இல்லை.

எனக்கு இலங்கைத் தமிழர்களுடன் தொடர்பு இருக்கிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் உப்சலா பல்கலைக்கழகத்துக்கு பரிவர்த்தனைத் திட்டம் ஒன்று இருப்பதே இதற்குக் காரணம்— என்று கூறினார்.

தஞ்சாவூர் தமிழ் மாநாட்டுக்கு சென்றிருந்த சுவீடனின் உப்சலா பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் ஷேர்க்கும் இந்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஓ)

## காமினி கொலைச் சம்பவம்:

# முக்கிய சந்தேக நபர் செட்டிகுளத்தில் கைதாம்

கொழும்பு, ஜன. 7

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவையும் மற்றும் ஐம்பது பேரையும் பலி கொண்ட கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக முக்கிய சந்தேக நபர் ஒருவரைப் பாதுகாப்பு படையினர் கைது செய்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன,

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய நபரான சாரதி ஒருவரை விசேட பாதுகாப்பு குழு ஒன்று வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பகுதியில் வைத்து கைது செய்திருப்பதாகவும்—

இது மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும்—

அச்செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தன. (உ)

# அனுமதி பெற வேண்டும்

தென்மராட்சி, ஜன 7

சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் சடலங்களைப் புதைக்கவும், தகனம் செய்யவும் இனிமேல் சாவகச்சேரி நகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும் என்று நகரசபைச் செயலாளர் திரு. சி. நடராசா அறிவித்துள்ளார்.

இம் மயானத்தில் சடலங்களைப் புதைக்கவும், தகனம் செய்யவும் நகரசபையில் அரிய கட்டணம் செலுத்தினால் மட்டுமே மயான வளவுக்குள் சடலங்களை கொண்டு செல்ல அனுமதிக்கப்படும் எனவும்—

இந்நடைமுறை கடந்த முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# சைவசமயப் பரீட்சையும் செயல்முறை போட்டியும்

யாழ்ப்பாணம், ஜன. 7

வண்ணை சாந்தையர் மடம், ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் கடந்த 41 வருடங்களாகப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடத்தி வரும் சைவ சமய அறிவுப் பரீட்சையும், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் என்பவற்றில் செயல்முறைப் போட்டியையும் இவ் வருடமும் நடத்தவுள்ளது.

சைவ சமய அறிவுப் பரீட்சை ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான மாணவர்களுக்கும், செயல்முறைப் போட்டி சகலரும் பங்குபற்றக் கூடிய விதத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

சைவ சமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 12ஆம், 14ஆம் திகதிகளிலும், செயல்முறைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளது. இவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டது.

# விலை நிர்ணய குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 - 30 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஓ-4)

# இரவில் வீட்டு வளவுக்குள் புகுந்து திருடும் பேர்வழிகள்

யாழ்ப்பாணம், ஜன. 7

மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் அடிக்கடி திருட்டுக்கள் இடம்பெற்று வருவதால், அப்பகுதி மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

இரவு வேளைகளில் வீட்டு வளவுகளுக்குள் திருடர்கள் புகுந்து ஆடு, மாடு, கோழிகள் மற்றும் தேங்காய் போன்றவற்றை சந்தடியில்லாது அபகரித்துச் சென்று விடுகின்றனர்.

திருட்டுக்கள் அனேகமாக ஒரே பாணியிலேயே நடைபெற்று வருகின்றன என்றும்—

இதனால் குறிப்பிட்ட சிலரே திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் போல் தெரிகிறது என்றும் [illegible] மக்கள் கூறுகின்றனர். (ஓ)

# கழிப்பறைகள் அமைப்பு

சுகாதார சீர்கேடுகளை கருத்தில் கொண்டு குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கழிப்பறையினை [illegible] [illegible] மாணவர்களின் [illegible] கல் பெருமளவில் குறைந்துள்ளன. [ஓ]

## முழுமையான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பேச்சுக்கள் குழம்பின. பிரேமதாஸாவுடன் இடம் பெற்ற பேச்சுக்களின்போதும் இராணுவம் அத்துமீறல்களில் ஈடுபட்டதால் அந்தப் பேச்சும் குழம்பியது.

அந்தக்காலங்களில் நாங்கள் மேற்கொண்ட போர் நிறுத்தங்கள் எதுவும் எந்தவித மான உருப்படியான வெளிநாட்டுக் கண்காணிப்பு செய்யப்படவில்லை.

இந்த முறைதான் முதல் தடவையாக வெளிநாட்டுக் கண்காணிப்பு வருகிறது.

போர் இடைநிறுத்தம் வெற்றி பெறுவதோ அல்லது தோல்வியடைவதோ அவை எல்லாம் ஆயுதப்படைகளிடம் தான் தங்கியுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் உறுதியான — நேர்மையான முறையில் கடைப்பிடிப்போம்.

போர் இடைநிறுத்த ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக எழுத்து மூலம் அரசு பிரகடனம் செய்து இன்று வெளியிடும்.

எமக்கும் எழுத்து மூலம் அரசு அறிவிக்கும். நாமும் எழுத்து மூலம் அறிவிப்போம்.

போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிக்க நோர்வே, கனடா, நெதர்லாந்து பிரதிநிதிகள் வருவார்கள்.

இப்படியான கண்காணிப்புப் பணிகளில் தாம் ஈடுபடுவதில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு எமக்கு தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசுக்கும் இது பற்றி அறிவித்துள்ளோம் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு எமக்கு தெரிவித்துள்ளது.

ஆகவே இந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகள்தான் இந்த ஆறு மாவட்டங்களின் சமாதானக் குழுக்களின் தலைவர்களாக இருந்துபோர் இடைநிறுத்தத்தை கண்காணிப்பார்கள்.

இந்தக் குழுக்களின் செயற்பாடுகள் எப்போது ஆரம்பிக்கும் என்று தற்போது கூற முடியாது. எவ்வளவு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிப்பார்கள்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

# சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் சிறப்பு விழா

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த நாள் அறநிதியச் சிறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

சிறப்பு விழா நிகழ்ச்சிகள் காலையும் பிற்பகலும் இரண்டு பகுதிகளாக நடைபெறும். காலையில் உரை அரங்கும் பாராட்டு நிகழ்வும் இடம்பெறும். பிற்பகலில் பண்ணிசை அரங்கும் பாராட்டுநிகழ்வும் இடம்பெறும்.

பௌராணிகர் சிவத்திரு சி. சண்முகவடிவேல், சைவப் புலவர் சு. செல்லத்துரை தமிழருவி த. சிவகுமாரன், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், சம்பவாரிதி இ. ஜெயராஜ், சங்கீதவித்துவான்பொன். சுந்தரலிங்கம், தேவார இசைமணி ஆர். திருஞானசம்பந்தன், சங்கீத பூஷணம் மோகனாம்பிகை கணேசன், சங்கீத வித்துவான் நா. மு. நவரத்தினம் ஆகியோர் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர்.

காலை, பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வசிப்பார். (ஓ-4)

## தங்கமே தருமச் செல்வி!

தங்கம்மா அப்பாக்குட்டி தமிழ்சைவச், சபைக்கோர் பாட்டி
துங்கமா துர்க்காதேவி துரந்தரி சொல்லின் செல்வி
எங்குமே ஞானச் செல்வி எழுபது அகவை கண்ட
தங்கமே தருமச் செல்வி தழைத்துநீள் வாழி! வாழி!!

—அரியாலையூர் **வே. ஐயாத்துரை**

## தருமத்தின் தாய் நீவாழ்க!

நாவலரின் பாதையிலே சைவம் காட்டும்
நல்லறத்தின் சித்தாந்த அடி நடந்து
தேசத்தின் விடிவுக்கு அமைதிக்காக
தெய்வத்தின் அருள் வேண்டித் தினந் தொழுது
ஊருக்குத் தொண்டு செய்தல் ஒன்றே வாழ்வின்
உயர் வென்ற மானிடத்தின் நெறியில் நின்று
பார்போற்ற வாழும் ''சிவத்தமிழ்ச் செல்வி''
பலநூறு எழுபதுகள் கண்டு வாழ்க!

—நெடுந்தீவு **லக்ஸ்மன்**

## முன்தவஞ் செப்பற் பாற்றோ!

எழுபது என்றா லான்றோர்
எழுச்சியே மிகுமென் பார்கள்,
தொழுவது துர்க்கை பாதம்
தூயதங் கம்மா நல்லாள்,
வழுவது வாரா வண்ணம்
வளர் தமிழ் சைவங் காக்க
முழுவது மவையாய் நிற்பாள்
முன்தவஞ் செப்பற் பாற்றோ!

—ஆசிரியமணி **அ. பஞ்சாட்சரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஓர் முக்கியமான திருப்பம்

## நெதர்லாந்து வானொலியில் ரீட்டா செபஸ்தியான்

கொழும்பு, ஜன. 7

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் இடைநிறுத்தம் உடன்பாடு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது.

நெதர்லாந்து வானொலியில் கொழும்பு செய்தியாளர் ரீட்டா செபஸ்தியான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு தேர்தல்களில் சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு சிங்கள மக்கள் அவருக்கு ஆணை வழங்கியிருந்தனர்.

இதனால் இந்த உடன்பாட்டை சிங்கள மக்கள் எதிர்க்கமாட்டார்கள்.

சமாதானத்துக்காக தாம் இனப்பிரச்சினையை தீர்க்க எடுக்கும் ஏற்பாடுகள் குறித்து அவர் வழங்கிய உறுதிமொழியை சிங்கள மக்கள் அங்கிகரித்துவிட்டனர்.

இந்த போர்இடைநிறுத்தம் உடன்பாடு நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்பட வாய்ப்பு அளிக்கும் என்று அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

அத்துடன் அரசியல் தீர்வு காணலாம் என்றும் அரசு நம்புகிறது.

பேச்சுவார்த்தையை தொடர அரசுக்கு சகலதரப்பும் ஒத்துழைப்பு வழங்குகிறது.

ஒரு வருடத்துக்கு 2500 கோடி ரூபா செலவிடப்படும் யுத்தத்தை தொடர நாடு தாங்காது. யுத்தம் நிறுத்தப்படாவிட்டால் அபிவிருத்தி செய்ய முடியாது.

அரசியல் தீர்வு மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமா என்பது இன்றும் கேள்விக் குறியாக உள்ளது. அதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இப்போது தான் ஆரம்பம்— என்று கூறினார். (இ-3)

# பேச்சுக்கு அடிப்படையாக அரசு யோசனை தெரிவிக்கும்

கொழும்பு, ஜன. 7

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல்கள் சம்பந்தமான- அரசின் திட்டத்தை யோசனைகளை) விரைவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் வழங்குவோம்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அறிவித்தார்.

நாடளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய நீண்ட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது

தனதுஉரையின்போது போர் இடைநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறித்து ஜனாதிபதி அறிவித்ததும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட நேரம் கரகோஷம் செய்து ஆரவாரித்தனர்.

கொள்கை விளக்க உரையில் ஐ. தே. க அரசின் கடந்த கால நடவடிக்கைகளைச் சந்திரிகா பெரிதும் சாடினார்.

கடந்த அரசின் நடவடிக்கைகளால் நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகள் குறித்தும் அவர் விளக்கினார்.

பொருளாதார வளர்ச்சி திட்டங்களை தனியார் மயமாக்கும் பாரிய திட்டங்களையும் அவர் வெளியிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று நாடாளுமன்றக்கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையில் மற்றும் முக்கிய பகுதிகள் வருமாறு:—

நாங்க அரசாங்கத்தைக் கையேற்ற ஒரு சில தினங்களில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கவனமாக அமைக்கப்பட்ட பேச்சு வார்த்தைகளைத் தொடக்கினோம்.

இப்போது இருந்து இரண்டு நாட்களுக்குள்— ஜனவரி எட்டாம் திகதி ஆரம்பிக்கவுள்ள பகைமை நிறுத்தத்துக்கு விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் கண்டுள்ளோம் என்பதை இங்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### எஸ். டபிள்யூ. ஆர். டி பிறந்த தினத்தில்

நாம் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியின் ஸ்தாபகரான எமது தந்தையின் 91 ஆவது பிறந்த தினத்தை நாம் கொண்டாடும் அந்நாளில் பகைமை நிறுத்தம் மூலம் சகல சமூகங்களிடையேயும் சகோதரத்துவம் அமைதி என்னும் மனிதப் பண்புகளினால் ஒளியூட்டப்பட்ட ஒரு புதிய சமாதான சமத்துவ நீதி சகாப்தத்தை தோற்றுவிக்க முடியும் என நம் நம்புகிறோம்.

ஆயுதப் போருக்கும், இனப் பிரச்சினைக்கும் வழிகோலிய அடிப்படை விடயங்களை ஆராயும் பேச்சு வார்த்தைகளுக்கான ஒருமுன்னேற்பாடாகவே இப் பகைமை நிறுத்தத்தை எமது அரசாங்கம் காண்கிறது.

### அரசின் யோசனை தெரிவிக்கப்படும்

விரைவில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகளின் தொகுதி ஒன்றை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் தெரிவிப்போம். அது பேச்சுக்கள் மூலம் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு அடிப்படையாக அமையும்.

எவ்விலை கொடுத்தும் சமாதானத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்பது எமது விருப்பம் அல்ல.

கௌரவத்துடனேயே சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகிறோம் என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும்.

உத்தேச தீர்வு எல்லாச் சக்திகளினதும் கண்ணியத்தையும் சுய கௌரவத்தையும் பாதுகாக்கும்.

அத்துடன் எல்லா கலாசார குழுமங்களினதும் இனங்களினதும் அபிலாசைகளுக்கு ஏற்றதாக அமைவதுடன் பெரும்பான்மைச் சமூகத்தின் நலன்களையும் பாதுகாக்கும்

நாம் போற்றும் இலட்சியமான சமாதானத்தை தேடும் இம் முயற்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரினதும் நல்லாசிகள் அரசாங்கத்துக்கு உண்டு என்பதை அறிந்து நான் பெரும் உற்சாகமும் தைரியமும் அடைகிறேன்.

எனது இக்கூற்று நான் முன்னர் கூறியது போன்று சுதந்திரமும் நேர்மையும் மிக்க ஆட்சிக்கான உரிமையை மீளப் பெற்றுக் கொள்வதுடன்—

சகலருக்கும் நியாயமானதும் சமமானதுமான — உறுதியான ஒரு பொருளாதார அமைப்பைக் கட்டி எழுப்பி பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளவும் ஆட்சிப் பொறுப்பை எம்மிடம் கையளித்திருக்கின்றது.

### பொருளாதார சுமைகள்

எனக்கு முன் இந்த ஆட்சிப் பொறுப்பில் இருந்தோர் தாங்க முடியாத பொருளாதார, நிதி முகாமைச் சீர்கேட்டை- விட்டுச் சென்றுள்ளனர் என்பதை நான் இங்கு கூறாவிட்டால் மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையில் நான் தவறிவிடுவேன்.

இச் சீர்கேட்டின் விளைவுகள் எவ்வளவு பிரமாண்டமானவை என்பதை எமது நாடு உணரவேண்டும்.

1994 இல் 5,800 கோடி ரூபாவாக இருந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நாம் பதவிக்கு வந்த பொழுது 7630 கோடி ரூபாவாக அதிகரித்திருக்கிறது.

### கால்பங்கை விழுங்கும் வடகிழக்கு மோதல்

வடக்கு-கிழக்கு மோதல் எமது தேசிய சேமிப்புகளில் கால் பங்கை விழுங்குகிறது. மறைமுகச் செலவுகள் இதை விட மிக அதிகமானதாகும்.

பகைமை நிறுத்தப்பட்ட பின் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படும் சமாதானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 8 சத வீதத்தை விடுவித்து அரச சேமிப்புகளில் சேர்க்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான முதலீட்டுச் சுமையை தனியார் துறை தாங்க நேரிடும். அரசாங்க முதலீடு தற்போதைய மட்டத்தில் வைத்திருக்கப்பட மொத்த உற்பத்தியில் 25 சதவீதத்தை தனியார் துறையே கவனிக்க வேண்டும். இதனை சாதிக்க முடியும் என நம்புகிறோம்.

இப்படி அவர் தெரிவித்தார்.

(ஐ)

---

### படை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மீனவர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்.

இராணுவ முகாம்கள், கடற்படைத் தளங்கள் அமைந்துள்ள பகுதிகளை அண்டிய பிரதேசங்களை தவிர்த்துமீன்பிடித்தொழிலை மேற்கொள்ளலாம் என்றும்—

இது குறித்து மீனவர்களுக்கு அறிவுறுத்தப்படும் என்றும் — அவர்கள் தெரிவித்தனர்.

---

### போர் இடைநிறுத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்கா மேலும் கூறியதாவது:-

ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. சங்குப்பிட்டி— பூநகரிப் பாதையைத் திறப்பது சிரமம்.

ஆயினும் மாற்றுப் பாதைகளை திறப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. பூநகரி முகாமை 500 மீற்றர் தூரம் பின்னோக்கி அமைப்பதற்கு அரசு முடிவுசெய்துள்ளது. ஆனால் பூநகரி முகாமை அகற்றுவது பற்றி விடுதலைப் புலிகளுடன் எந்த வித ஒப்பந்தமும் செய்யப்படவில்லை.

ஆகக் கூடுதலான அளவுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

வடபகுதியில் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரசு 390 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது

இதற்காக வெளிநாட்டுஉதவியும் பெற்றுக் கொள்ளப்படும்

அரச தரப்புக் குழுவினர் மூன்றாவது கட்டப் பேச்சுக்காக எதிர்வரும் 14 ஆம்திகதி யாழ். செல்லும்போது போர் இடைநிறுத்தத்தைத் நீடிப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும்.

இந்நிலையில் —

இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு இதுவரை கேட்கவில்லை.

— இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

---

### பிராந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் இடைநிறுத்தம் குறித்த விவரங்களையும் தலைவர் பிராந்திய தளபதிகளுக்கு அறிவித்துள்ளார்.

மேற்கண்டதகவலை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

---

### கைதான இருவரும் விடுதலை!

கொழும்பு. ஜன.7

கரவைக் கந்தசாமி கொலை தொடர்பாகசந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவியும் அவரது சகோதரரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனகொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-6)

---

### இறுதிக்கட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் பற்றிய விவரங்கள் இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அறிவிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் கிறிஸ்தவர்கள் வவுனியாவுக்கு வரவும் அதன் பின் கொழும்பு வந்து பாப்பரசரைத் தரிசிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுப்பதற்காக கத்தோலிக்கமதத் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது — என்றார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு படையினர் பூரண ஆதரவு வழங்கி வருகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர்கள் தர்மசிறி சேனநாயக்கா, கேணல் அனுருத்த ரத்வத்தை பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி, சமாதானத் தூதுக் குழுவின் உறுப்பினர்கள் பொலீஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (ஐ)

---

# அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கும் சூழ்நிலை

## அமைச்சர் ரத்வத்த தகவல்

கொழும்பு, ஜன. 7

தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலை மேலும் விருத்தியடையும் பட்சத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய அவசியம் இனிமேல் இருக்காது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் ஒளிவு மறைவின்றி மேற்கொள்ளப்படும் என்றும், [illegible] க்களும் [illegible] சிக்கு ஆதரவு வழங்குவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணையை அமைச்சர் ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலும், கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் சில இடங்களிலும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் அந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவே[illegible]

---


யா / வண். வட கிழக்கு
அருள்மிகு கொண்டலடி
விநாயகர் ஆலய

**வருடாந்த**
**அலங்கார உற்சவம்**

**07 - 01 - 95 — 16 - 01 - 95** வரையுள்ள பத்து தினங்களும் விசேட அபிஷேகம் பூசை நடைபெறும்.

**17 - 01 - 95** காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். இரவு 7 மணிக்கு சுவாமி தெருவீதி உலா வருவார்.

பிரதிஷ்டா பிரதம குருவாக
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்
(ஆலய பிரதம குரு)

பத்துத் தினங்களும் இரவு 8-30 – 9-30 வரை விசேட சொற்பொழிவு நிகழ்த்துபவர்

"சிவநெறித் தொண்டன்"
திரு. செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)

பொருள்: 'விநாயக புராணம்'

**18 - 01 - 95** மாலை 6-00மணி முதல் விசேட மேளக் கச்சேரிகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

(34572) ஆலய நிர்வாக சபை



துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை
**தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களின்

**எழுபதாவது**
**பிறந்ததின வாழ்த்து**

சைவமும் தமிழும் தழைத்தோங்க
நீடூழி வாழ வேண்டுமென்று
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
(சி/5763)



**நிரு பட்டப்படிப்பு பிரிவு**

கோண்டாவில்

கல்வியாண்டு 96

(யார்ப்பாணம், பேராதனை)

**G. A. Q.**

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

பொருளியல், அரசியல், மெய்யியல், இந்து நாகரிகம், தமிழ், புவியியல், வர்த்தகம் இவற்றுடன் துணைப்பாடங்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு: மாணவர்களின் நலன்கருதி நேர அட்டவணை அமைக்கப்படும்.

நிர்வாகம்

(சி/125)



சாவகச்சேரி
லயன்ஸ் கழகம்
நடத்தும்
வசதி குறைந்தோருக்கான

**கண் சத்திரசிகிச்சை முகாம் - 4**

காலம்: நாளை ஞாயிறு 08 - 01 - 1995
காலை **7.00** மணி

இடம்: சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்களின் ஆசரவில் வடமராட்சி மக்கள் 15 பேருக்கும், சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆதரவில் தென்மராட்சி மக்கள் 15 பேருக்கும் கற்றகேற் [Cataract] எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள நோயாளர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் குழுவினால் சத்திரசிகிச்சை செய்யப்படும்.

லயன்ஸ் கழகம்
சாவகச்சேரி

ஆதரவு வழங்குவோர்:
**ஜெயமதி ஸ்ரோர்ஸ்**
241, யாழ். வீதி, சாவகச்சேரி.
உரிமையாளர்: ந. ஜெயவீரசிங்கம்
[சி/124]



**கண்ணீர் அஞ்சலி**

எமது தோழி சர்மிளாவின் தந்தையான
அமரர் N. சங்கரலிங்கம்
அவர்களின்
மறைவினால் துயருறும் குடும்பத்தவர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிக்கின்றோம்

—நண்பிகள்

(34574)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி அழைப்பும்**

அமரர் வல்லிபுரம் கந்தையா

தோற்றம்: 12 — 02 — 1928
மறைவு: 08 — 12 — 1994

மீசாலை கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (07 - 01 - 1995) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு.
(சி/109)



**மரண அறிவித்தல்**

டானியல் பிரான்சிஸ் சேவியர்
[பிசினஸ் அன் என்ஜினியரிங் பணிப்பாளர்]

பிரான்சிஸ் சேவியர் டானியல் (அருமை) 28-12-94 அன்று கொழும்பில் காலமானார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், டிலானி, டிலோஜ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற மோசஸ்டானியல், அடைக்கலம் [தலைமையாசிரியர்] அவர்களின் அன்பு மகனும், திரு. திருமதி. தம்பிஐயாவின் [பருத்தித்துறை] மருமகனும், திரு. யேசுதாசன் [பொறியியலாளர்], காலஞ்சென்ற இம்மனுவேல் [பொறியியலாளர்], திரு அல்பேட் தம்பிநாயகம் [ஓய்வுபெற்ற ஆசிரியர்], திரு ஞானப்பிரகாசம் [நோர்லி என்ரபிரைசஸ்], திருமதி. பி. எல். சின்னத்துரை [அதிபர் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்], திருமதி. றெஜினா [அரசினர் வைத்தியசாலை, கண்டி], திருமதி. திரேசா [துல்கிரியா] ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-12-94 வியாழக்கிழமை அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. பி. எல். சின்னத்துரை
(சகோதரி)

(34575)


இப்பத்திரிகை [illegible] யாழ்ப்பாணம் [illegible] 07-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org